
உ



"நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு"

யமுனா வீதி நல்லூரைச் சேர்ந்தவரும், அமரர்கள் செல்லையா, சின்னம்மா
அவர்களின் புத்திரியுமான

## அமரர் செல்வி செல்லையா சரஸ்வதி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**30-09-2003**

"நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு"

*11 யமுனா வீதி நல்லூரைச் சேர்ந்தவரும்,*
*அமரர்கள் செல்லையா, சின்னம்மா அவர்களின் புத்திரியுமான,*

# செல்வி செ.சரஸ்வதி

(ஓய்வு பெற்ற ஆசிரியை)
அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

சுபானு ஸ்ரீ புரட்டாதி மீ 13ஆம் திகதி
செவ்வாய்க்கிழமை

**30 - 9 - 2003**

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

இறைநிலை எய்திய அமரர்

# செல்வி செல்லையா சரஸ்வதி

| பூவுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 1937 |  | 2003 |
| 07 | | 09 |
| 29 | | 14 |

## திதி வெண்பா

"சுபானு வருஷ ஆவணித் திங்களிலே
பானுவாரம் அபரபக்கச் சதுர்த்தி இந்நாளில்
சீர் பெறு சரஸ்வதி தொல்லுலகை நீத்துச்
சிவனடி சேர்ந்த நாள்".

## ஆசிரியப்பா

ஆழ்கடல் சூழ் ஈழமணித் திருநாட்டின் வடபால்
தமிழர் ஆட்சிச் சிறப்புடனே செல்வம் கொழித்து
நிமிர்ந்து நின்ற யாழ் நகரில்
ஆசார அனுஷ்டானச் சிறப்புப் பெற்ற நல்லூரில்
புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் நற்கல்வி பயின்ற காலை
தந்தை தமையன் விட்டேக
பரியாரி தொழிலையே பாங்குடன் ஏற்ற
செல்லையா எனும் பெரும் தவத்தோனும்
நல்லூர்ப் பூந்தோட்டப் பெரும்பணிபுரிந்த
வீரவாகு வழித் தோன்றிச் செங்குந்த
மரபுதனில் வந்துதித்த சின்னம்மா எனும் சீர்மிகு அணங்கும்
இல்லறம் எனும் நல்லறம் காணும் வேளை
வந்து பிறந்தோரே பெருந்தெருக்கள் திணைக்களப்
பிரதம கணக்காளர் அமரர் இராமலிங்கத்துடன்
சகோதரிகளாம் கவின் மிகுநங்கை கனகம்மாவும்
வணிகத்துறைப் பயிற்சி ஆசிரியர் என
வர்த்தகக் கல்வியை வளமாகப் புகட்ட வந்தோர்
சாற்றுமுயர் சரஸ்வதி எனும் தெளிந்த நல்லறிவினரும்
போற்றுமுயர் பொன்னம்மா எனும் தூய நல்லன்பினளும்
ஈன்றோர் சிந்தை குளிரவே செய்து
தொட்டிலில் மகிழ்வுடன் ஆடியே மகிழ்ந்து
சீர் நிலம் தவழ்ந்து ஓரடி ஈரடி மெல்லவே நடந்து
சீவிச் சிங்காரித்துப் பள்ளிசேரவே பாங்குடன்
செங்குந்த இந்துக் கல்லூரி நாடி இனிதுபயின்று
இருந்து வரும் நாளில் கோயில் திருப்பணி
இறை தொண்டாற்றிய தந்தை வழியே

ஆசார அனுஷ்டானக் கிரமந் தவறாமல்
வாழ்ந்திருந்த காலை, வளமான
பள்ளிக் கல்வி பாங்குடனே முடிய
தொழிற் கல்வி கற்கும் பேர் அவாவுடன்
தொழினுட்பக் கல்லூரியை நாடினளே கொக்குவிலில்
வர்த்தகக் கல்வி, வணிகத் துறையில் தேர்ந்து
ஆசிரிய பயிற்சி கலாசாலையில் பயின்று
கசடறப் பயின்ற தரமிகு கல்வியைச்
செவ்வனே புகட்டப் பதவி பெற்றது யாழ் மானிப்பாய் இந்துக்கல்லூரியில்
மணவினை விலக்கிக் கன்னியாகவே காலம்
கழித்து தூய பெரு வாழ்வை வாழ்ந்தவேளை
பெறாமகள் வழியே கிடைத்த பேரப்பிள்ளைகள்
கிளிச் சித்தி என்று அழைக்கும் வேளை
சீராட்டி மடியில் வைத்துத் தாலாட்டி மகிழ்ந்து
ஷஷ்டியப்த பூர்த்தியும் கண்டு களிகூர்ந்து
பேரப் பிள்ளைகள் வழிப்பீட்டப் பிள்ளைகளும்
காணக் கிடைக்காத செல்வங்களெனக் கண்டு
ஆண்டவன் பணிபல ஆற்றியே இறுதிநாள்
தங்கைக்காய்ப் பல நேர்த்திகள் முடித்து
உற்றார் உறவினர் தேடியவேளை
இப்புவி நீங்கியே ஓடி மறைந்தீரே!

## தேற்றம்

தோற்றம் நிலை யொடுக்கம் எனும் இவை மூன்றும்
ஏற்றிடும் இவ்வுலகில் சாலவும் உண்மை – தங்கை,
சரஸ்வதியென்னும் நல்லிழையாளும் நீர் அலைமேல் நீர்க் குமிழிபோல்
சேர்ந்தார் இறைவனடி எமைப் பிரிந்து.

★★★



## பஞ்ச புராணம்



### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்
அல்லல் போம் வல்வினை போம் அன்னை
வயிற்றில் பிறந்த தொல்லைபோம் போகாத்துயரம் போம்
நல்ல குணமதிக மாமருனை கோபுரத்துள்
வீற்றிருக்கும் கணபதியை கைதொழுதெக்கால்

### தேவாரம்

இந்திரனுக்கு அருஞ் சாபம் தீர்த்த லிங்கம்
ஏழேழு சங்கத் தமர்ந்த லிங்கம்
கந்தரத்தால் கொடு விஷத்தைக் காத்த லிங்கம்
கருக் குருவிக்குபதேசம் செய்த லிங்கம்
தந்திரத்தால் வணிகப்பெண் மாமனாகி
சபைக்கேறி வழக்குரைத்த சாட்சிலிங்கம்
சுந்தரர்க்கு தூதாகி நின்ற லிங்கம்
சொக்கலிங்கம் தனை நினைக்கில் சொர்க்கம்தானே.

## திருவாசகம்

1. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆளாமல் காப்பானை ஏற்றாதே
சூழ்கின்றாய் கேடுனக்கு சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ யவலக் கடலாய வெள்ளத்தே.

2. கொம்பரில்லாக் கொடி போல் அலமந்தனன் கோமளமே
வெம்புகின்றேனை விடுதி கண்டாய் விண்ணர் நண்ணுகில்லா
உம்பர் உள்ளாய் மன்னும் உத்தர கோச மங்கைக் கரசே
அம்பரமே, நிலனே, அனல்காலொடு ஒப்பானவனே.

## திருவிசைப்பா

தத்தை யங் கனையர் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறாயிரங் கூறிட்டு
அத்திலங் கொரு கூறு உன் கண் வைத்தவர்க்கு
அமருலகு அழிக்கும் நின்பெருமை
பித்தனென்று ஒரு கால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
கங்கை கொண்ட சோழேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க



அன்ன நடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறினைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள் வாயே
உத்தமா தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

★★★

# சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக் கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும்பணியிற் பணித்தருள் வாய்
பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமுது
ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்



வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதம் தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராத தென்னே
நெடுந்தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்து இருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்

காட்டும் வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ் ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

★★★



## Children learn from what they live
## குழந்தைகள் சீவிக்கும் நிலைமையில் கற்றுக் கொள்வர்

- கண்டனத்தில் வாழும் பிள்ளை நிந்திக்கவே (Condemn) கற்றுக் கொள்ளும்.

- பகைமையுணர்வுடன் வாழும் பிள்ளை, சண்டையிடக் கற்றுக் கொள்ளும்.

- அவமதிப்பினை யே வாழும் பிள்ளை அச்சம் கொள்ளக் கற்றுக் கொள்ளும்.

- பழிப்பின் (Shame) இடையே வாழும் பிள்ளை குற்ற உணர்வுடன் வாழக் கற்றுக் கொள்ளும்.

- சகிப்புத்தன்மையுடன் வாழும் பிள்ளை பொறுமையுடன் வாழக் கற்றுக் கொள்ளும்.

- உற்சாகமூட்டலிடையே வாழும் பிள்ளை தற்துணிவுடன் வாழக் கற்றுக்கொள்ளும்.

- பாராட்டலிடையே வாழும் பிள்ளை மதிக்கக் கற்றுக் கொள்ளும்.

- நேர்மையாக வாழும் பிள்ளை பக்கச் சார்பின்றி வாழக் கற்றுக்கொள்ளும்.

- பாதுகாப்புணர்வுடன் வாழும் பிள்ளை தன் நம்பிக்கையோடு வாழக் கற்றுக் கொள்ளும்.

- மெச்சுதலிடையே (சாதகமான மனப்பாங்கு Positve Attitude) வாழும் பிள்ளை தன்னை நேசிக்கக் கற்றுக் கொள்ளும்.

- உவந்தேற்கையுடன் (Qcceptance) சினேக பூர்வமாகவும் வாழும் பிள்ளை உலகத்தை அன்பு செய்யக் கற்றுக் கொள்ளும்.

★★★

- *செத்திடக் கடலில் குதித்தவன் முத்தெடுத்ததுமுண்டு முத்தெடுக்கக் கடலில் குதித்தவன் செத்ததுமுண்டு எதுவும் எம் கையில் இல்லை.*
- *பக்திக்கும் மரியாதைக்குமுரிய இடம் கோயில் மட்டுமல்ல நாம் பணிபுரியும் இடமும்தான்.*
- *இன்பத்தைக் கண்டு குதிப்பதும் துன்பத்தைக் கண்டு கலங்குவதும் மனிதனின் பலவீனம்.*
- *எல்லோருக்கும் நல்லவனாக இருக்க முயற்சித்தாயானால் ஒருவருக்கும் நல்லவனாக இருக்க முடியாது. எப்போதும் உண்மைக்கு நல்லவனாக இரு, உண்மையானவர்களுக்கு நல்லவனாக இருப்பாய்.*



## நன்றி நவிலல்

**14.09.2003ல் சிவபதப்பேறடைந்த எமது குடும்ப உறுப்பினர்**

***செல்வி செல்லையா சரஸ்வதி***

**அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்து எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

30.09.2003. குடும்பத்தினர்.



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பிள்ளையார் அச்சகம், நல்லூர். ☎: 222 6722